ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. அக்ஷய௵ மாசி௴ பகுதி ௨.
Vol 4. *February & March 1927.* No. 2.

நாமகரணம்.

உலகில், நாமகரணமென்பதும் பிள்ளைகட்குச்செய்யும் சடங்குகளுள் ஒன்றாக வழங்கக்காண்கிறோம். நாமகரணமாவது:— பெயரிடுவதாம். ஒவ்வொரு பொருளின் தன்மை இன்னதென்றறிந்து வழங்குதற்கு அநுகூலமாக ஸர்வேசுவரனால் உலகில் காணப்பட்ட எல்லாப் பொருள்கட்கும் படைப்புக் காலத்தொடக்கத்திலே பெயரிடப்பட்டன. ஆகவே பெயர் பொருள்களை வேறு பிரித்தற்கோரடையாளமாக விருப்பதொன்றுமென்றறியத்தக்கது.

இவ்வளவு மாத்திரமே பெயர்கட்குப் போது விலக்கணமாமென்று கருதி உலகில் வாழும் மக்களுக்கு டித்தன், குப்தன், பித்தன், ராக்கன், மூக்கன், என்று வாய்வந்த பெயர்களை இட்டு வழங்கலாகாது. பகவந்நாமத்தை இட்டு வழங்க வேண்டும். பகவந்நாமம் எல்லாப் பலன்களையும் தரத்தக்கதாம். தம் புதல்வர்கட்குப் பகவந்நாமத்தை இட்டவர்களும், அப்பெயரைப் பெற்றவர்களும், அப்பெயரைச் சொல்லி அழைத்தவர்களும் ஸத்கதியடைவார்கள். தன் புதல்வனுக்குப் பகவந்நாமத்தை இட்ட காரணத்தால் அஜாமிளன் என்பவனும் ஸத்கதியடைந்தான்; என்ற வரலாற்றை யாவருமறிவர்.

நாமத்தாற் சொல்லப்படுகிற ஸர்வேசுவரனைக் காட்டிலும் நாமத்திற்கு மிகவும் பெருமையுண்டு. த்ரௌபதியைத் துரியோ

தனுதியர் மஹாஸபையிற் கொணர்ந்து பரிபவப்படுத்திய காலத்தில் பஞ்சபாண்டவர்களும் வாளாவிருக்கத் தன்னைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லாத மிக்க ஆபத்தடைந்த நிலையில் "ஶங்கசக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதாம்" "சங்கசக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம்" என்று பகவந் நாமத்தைச் சொல்லியவுடன் புடவை சுரந்தது. இதைக் குறித்து, லோகதேசிகனும் "வாச்யப்ரபாவம் போலன்று வாசகப்ரபாவம் அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்றுதவும்; த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்று அருளிச் செய்தார். இன்னும் 'பத்துவகை வைஷ்ணவலக்ஷணத்துள் பகவந் நாமத்தைத் தரிக்கப்பெற்றவர்களும் ஓர் வைஷ்ணவராவார்' என்று சொல்லப்பட்டுள்ளதினாலும் நாமகரணத்தின் பெருமை அறியலாகும்.

மேலும் வானர முதலிகள் பிர்ம்மாஸ்திரத்தாற் கட்டுண்டு உயிர்நீத்து ஸ்வர்க்கலோகஞ் சென்றகாலத்து அங்குள்ள தேவர்கள் வானர முதலிகளைப்பார்த்து,

> பார்படைத்தவன்படைக்கொருபூசனைபடைத்தீர்
> நீர்படக்கடவீரலீர்வரிசிலைநெடியோன்
> பேர்படைத்தவர்க்கடியவர்க்கடியரும்பெறுவார்
> வேர்படைத்தவெம்பிறவியாற்பிணக்குணுவீடு.

நீங்கள் பிர்ம்மாஸ்திரத்திற்கு ஒரு பெருமையை உண்டு பண்ணினீர்களேயன்றி உயிர் துறந்தீரல்லீர். கட்டமைந்த கோதண்டம் என்ற வில்லையுடைய அளவிட வொண்ணாப் பெரியோனாகிய ராமபிரானது பெயரைக் கொண்டவரும், அவர்க்கடியாரும், அவர்க்கடியவரும் ஸ்திரமாயுள்ள கொடிய பிறவியாற் கட்டுண்ணாத் மோக்ஷத்தைப் பெறுவாரன்றோ என்று கூறினார்கள். இங்கு, 'பேர் படைத்தவர்க் கடியவர்க்கடியரும் பெறுவார்' என்றதனால், பகவந் நாமத்தைச் சூட்டப்பெற்றவரின் அடியார்க்கடியார் பகவந் நாமத்தைத் தரிக்கப் பெறாதிருந்தாலும், பகவந்நாமத்தின் ஸாக்

ருகபலன் அவர்களளவும் ஏறிப்பாய்ந்து அவர்களையும் நல்வழி யிலுய்க்கும்; என்று நாமகரணத்தின் பெருமை சொல்லப்பட்டது.

பெரியாழ்வார், "கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்று சம்சாரிகளை அகற்றியவர் பின் அவர் களையும் நல்வழிப்படுத்தத் திருவுள்ளங்கொண்டு அவர்களை நோக்கி உயிர் விடும் தருவாயில் பகவந்நாமத்தைச் சொன்னவர் அடையும் பேற்றை எம்மாற் சொல்லுமளவிற்றன்று. இத்தன்மையுடைய பகவந்நாமத்தை உயிர் விடும்போதாவது இதரவிஷயப் பற்றற்றுச் சொல்வீராகில் யமதண்டனையினின்றும் தப்பி அர்ச்சிராதிகதி யாலே பரமபதஞ்சென்று மீட்சியின்றிப் பகவதநுபவம் பண்ண லாமென்று "ஆசைவாய்" என்ற திருமொழியில் உபதேசித்தார். இப்படி இதரவிஷயப் பற்றற்று உயிர் விடும்போது எம்பெருமா னுடைய நாமத்தைச் சொல்லுதற்குச் சக்தியற்றவர்களையும் ஏதே னும் ஒரு வழியால் பகவந்நாமத்திற் சம்பந்த முண்டாக்கத் திரு வுள்ளங் கொண்டு புத்திரப் பேறுடையாரை நோக்கி நீங்கள் ஏதே னும் பிரயோஜனத்தை விரும்பி உங்களுடைய புத்திரர்கட்கு மாண் டொழியும் மானிடர் பெயர்களை இடாதீர்கள். அங்ஙனமிடுவதால் நீங்கள் கருதிய பிரயோஜனம் கைகூடுமென்பதுமில்லை. மறுமைக் கும் அது உதவியாகாது. ஆதலால் பிச்சை யெடுத்தாகிலும் பகவந் நாமத்தைப் பெற்றபிள்ளைகளுக்கு இடுவீர்கள். இதனால் நீங்கள் அழியாத பதவியை அடைந்து ஆனந்திப்பீர்கள். என்று ஒருகால் சொன்னாற் போல ஒன்பதின்காலும் அருளிச்செய்தார்.

இங்ஙனம் தக்க ப்ரமாணங்களாலும், பெரியாருடைய உப தேசத்தாலும் தெளிவாக அறியக்கிடக்கிற பகவந்நாமத்தின் பெருமை அறியாத இக்காலத்திற் சிலர் தாய் தந்தையரால் இடப் பெற்ற பகவந்நாமத்தின் ஸ்வரூபம் விளங்காவண்ணம் N. S. சாரி என்பது முதலான பெயர்களைச் சூட்டிக்கொள்ளுகிறார்கள். இதனால் ஒரு பெருமையுண்டெனக் கருதினரோ? யாதோ? அறியோம்.

பெரியாழ்வார் பகவந்நாமகரண விஷயமாக அருளிய திருமொ ழியும், அதன் பொருளும் இங்கு அறிந்து கொள்ளவேண்டியது.

இன்றியமையாதாதலால் அவையும் விவரிக்கப்படுகின்றன. அவை வருமாறு:—

காசங்கறையுடைக்கூறைக்குமங்கோர்கற்றைக்கும்
ஆசையினல்அங்கவத்தப்பேரிடுமாதர்காள்!
கேசவன்பேரிட்டுநீங்கள்தேனித்திருமினே
நாயகன்நாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

இப்பாட்டால், பெற்றபிள்ளையர்க்கு ஆபாஸமான பெயரை விரும்பியிட்டு நரகத்திற்காளாகும் அறிவிலியர்களை நோக்கி நீங்கள் உங்களுடைய புதல்வர்கட்குப் பகவந்நாமத்தை இடுவீரேல் யமதண்டனை ஒழியப்பெற்று மோக்ஷலோகத்தையும் அடைவீர்களென்று உபதேசிக்கிறார்; என்று சொல்லப்படுகிறது.

அங்கு- அவ்விடத்தில், அற்பக்குணமுடைய மனிதரை மனிதர் என்று சொல்லுதற்குக்கூசி அங்கு என்ற சுட்டுச் சொல்லால் உணர்த்தினர். காசும் கறை உடை கூறைக்கும் ஓர் கற்றைக்கும்- காசும் கறைவேஷ்டியும் நெற்கற்றையும் கொடுக்கக்கூடுமென்கிற ஆசையினல் அவத்தம் பேர் இடும்- மிகுந்த ஆசையினல் பிள்ளைகளுக்குத் தாழ்மையான பேரை இடுகின்ற, ஆதர்காள்- அறிவற்றவர்களே! [ஆதர்- பசுப்போன்றவர்.] நீங்கள் கருதியபடி அந்த அற்பர்கள் கொடுத்தாலும் கொடுக்கலாம்; கொடுக்காதிருந்தாலும் இருக்கலாம். இப்படி அவருடைய இனிமையில்லாத பேரை இட்டு வாயைக் கெடுத்துக்கொள்வதைக் காட்டிலும்; கேசவன் பேர் இட்டு- எல்லோருக்கும் காரணமாயும் க்லேசத்தைப் போக்குகின்றவனுயுமிருக்கின்றவனுடைய பேரை உங்கள் பிள்ளைகளுக்கு இட்டு, தேனித்திருமின்- மனமகிழ்ச்சியுற்றிருக்கக் கடவீர்கள், நாயகன் நாரணன்- எல்லோருக்கும் தலைவனும் கல்யாண குணங்களையுடையவனுமான திருநாமத்தையுடையவனது, இங்கு நாரணன் என்றது பெற்ற பிள்ளைகளுக்கிட்ட பெயராயினும் அதற்குரியவனை எம்பெருமானுடைய இயல்பை நோக்கி நாயகன் என்று அடைமொழி கொடுத்தாளப்பட்டது. தம் அன்னை நரகம் புகாள்- அவனைப் பெற்றதாய் நரகத்தையடைய மாட்டாள். பிள்ளைக்கு நாராயணன் என்று பெயரானல் அவனைப் பெற்றவளுக்கு யமலோகம் புகுவது

கூடுமோ? பிள்ளையைப்பெற்று நாராயணன் என்று பெயரிட்டது, வசப்படுகைக்கோ? பெற்றவருக்கும், பிள்ளையளவில் அன்புமிக்கிருப்பதுமாதாவுக்காகையாலே இவளை இங்கு ப்ரதானமாக்கித் 'தம் அன்னை நரகம் புகாள்' என்று அருளினர். ஆனாலும் தந்தை முதலானர்கட்கு இப்பேறு ஸித்திக்குமென்பதற்கு இதை உபலக்ஷணமாகக்கொள்க.

அங்கொருகூறையரைக்குஉடுப்பதனுசையால்
மங்கியமானிடசாதியின்பேரிடுமாதர்காள்!
செங்கண்நெடுமால்சிரீதராஎன்றழைத்தக்கால்
நங்கைகாள் ! நாரணன் தம்மன்னைநரகம்புகாள்.

அங்கு- அற்பரிடத்தில், ஒரு கூறை அரைக்கு உடுப்பதன் ஆசையால்-ஒரு வஸ்திரத்தை வாங்கிஅரைக்கு உடுத்திக்கொள்ள வேணு மென்கிற ஆசையால், இங்கு ஒரு கூறை என்றதனுல் மேலாடைக்கும் தலைச்சீரைக்கும் வேறு தேடவேண்டுமென்ற பொருள் குறிப்பாலறியக்கிடக்கிறது. மங்கிய மானிடசாதியின் பேரிடும் ஆதர்காள்- அழிந்து போயிருக்கும் மனிதர்களுடைய "உங்களையாண்டார், அப்பாண்டார், இளிபுளி" என்பன போன்ற சிலபேர்களை இடும் அறிவுகேடர்களே! ஈசுவர விஷயஜ்ஞாந மில்லாதவர் உயிர்பெற்றிருந்தும் இல்லாதவராதலால் 'மங்கிய மானிடசாதி' என்றார். "ஆன்விடை ஏழன்றடர்த்தாற்காளானரல்லாதார் மானிடவரல்லர்" என்றதனுலுமறியலாம். செங்கண் நெடுமால் சிரீதரா என்று அழைத்தக்கால்- எல்லோருக்கும் தலைவனயிருக்கின்றவனுடைய திருநாமத்தை இட்டு 'செங்கண் நெடுமாலே' 'சிரீதரா' என்று அழைத்தால், செங்கணெடுமால் என்றது வாத்ஸல்யத்துக்கு அறிகுறியான செவ்வரியோடிய கண்களையும், தன்னை அடைந்தோரிடத்தில் மிக்க அன்பையுமுடையவன் என்றவாறு. அன்றி ஐசுவர்யத்திற்கு அறிகுறியான செவ்வரிபடர்ந்த கண்களையும் எல்லாரினும் மிக்க பெருமையையுமுடையவனென்று பொருள் கொள்ளினும் பொருந்தும். சிரீதரா என்றது நீர்மைக்கும் மேன்மைக்கும் அறிகுறியான லக்ஷ்மிக்கு நாயகன் என்றவாறு. நங்கைகாள்- சொல்லியவற்றை அறியவல்ல குணபூர்த்திகளையுடையவர்.

களே! "ஸ்த்ரீப்ராயமிதரம் ஜகத்" "ஸ்த்ரீப்ராயமிதரம் ஜகத்" என்றும், "நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்" என்றும் புருஷோத்தமனாகிய ஈசுவரனை ஒழிந்தாரெல்லாம் பெண்களாவார்; என்று சொல்லப்பட்டுள்ளதினால் இங்கு நங்கைகாள் என்றார். நாரணன் தம் அன்னை நரகம் புகாள்- நாராயணன் என்று பெயரைக்கொண்ட உமது பிள்ளையின் தாயானவள் நரகபடைய மாட்டாள்.

உச்சியிலெண்ணெயுஞ்சுட்டியும்வளையுமுகந்து
எச்சம்பொலிந்தீர்காள்!என்செய்வான்பிறர்பேரிட்டீர்
பிச்சைபுக்காகிலுமெம்பிரான்திருநாமமே
நச்சுமின்நாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

எச்சம் பொலிந்தீர்காள்-ஸந்தானத்தில் விளங்குகின்றவர்களே! உச்சியில் எண்ணெயும்- உச்சிக்கு இடவேண்டிய எண்ணெயும், இங்கு உச்சியில் எண்ணெய் என்றதனால் பிள்ளை தலைக்குத் துளி எண்ணெய் கிடைக்குமேயன்றி இட்டவர் தலைக்குக் கிடையாதென்ற பொருள் தொனிக்கும். சுட்டியும் வளையும் உகந்து- நெற்றியிற் கட்டும் சுட்டியையும் தோளிலிடுகின்ற வளையையும் பெற விரும்பி, என் செய்வான் பிறர் பேர் இட்டீர்- இந்தப் பிள்ளையைக் காப்பாற்றுவாரென்று கருதியோ? உங்களுடைய வறுமையகற்றவல்லரென்றோ? அவர்கள் வறுமையற்று நின்றது கண்டோ? லோகத்திற் கூறும் பழிமொழி ஒழியுமென்று மதித்தோ? மறுமைப் பயன் கைகூடுமென்று எண்ணியோ? என்ன பிரயோஜனத்தை முன்னிட்டு மனிதரின் பெயரை இட்டீர்கள்? தேசம் விசாலமாயிருக்கின்றதினால் அவ்வவ்விடத்திற்குச் சென்று; * பிச்சை புக்காகிலும்- பிக்ஷையெடுத்தாவது, எம்பிரான் திரு

* இவ்விடத்தில் நாலூராச்சான்பிள்ளை ஒரு ஐதிஹ்யம் அருளிச்செய்ததாகத் திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்வர். அது வருமாறு:— ஒரு பிராம்மணன் தன் பிள்ளைக்குப் பேரிடக்கருதி வல்லானொருவனிடம் சென்று 'இப்பிள்ளைக்கு ஐசுவர்யம் தரவல்லானொருவனுடைய பெயரை இடக்கடவீர்' என்று வேண்டி நின்றான். அப்பொழுது அவன் 'இப்பிள்ளைக்கு நீ வைச்ரவணன் (குபேரன்) என்ற பெயரைச் சூட்டுவாய்' என்றான். பிராம்மணன் ஐளிபிளி என்ற பெயரை இட்டான். அந்தோ! இவன் இங்ஙனமிட்டு அழைப்பதைக்காட்டிலும் நாராயணன் என்ற திருநாமத்தை யிட்டுப் பிக்ஷைபுக்காவது ஜீவிப்பது நன்றாமே; என்று அருளிச்செய்தார் என்பதாம்.

நாமமே நச்சுமின்-எம்பெருமானுடைய திருநாமத்தை விருப்பத்தோடு இட்டு அழைக்கக்கடவீர்கள், இதனால் எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் பிக்ஷுபுகாதிருக்கும் இம்மைப் பிரயோஜனமும் தன்னடைவேகிடைக்கும் என்பது தோன்றுகிறது. நாரணன் தம் அன்னை நரகம் புகாள் ——.

மானிடசாதியில்தோன்றிற்றோர்மானிடசாதியை
மானிடசாதியின்பேரிட்டால்மறுமைக்கில்லை
வானுடைமாதவா!கோவிந்தா!என்றழைத்தக்கால்
நானுடையநாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

மானிடசாதியில்- மனுஷ்யஜாதியில், தோன்றிற்று ஓர் மானிட சாதியை- பிறந்த ஒரு மனுஷ்ய ஜந்துவுக்கு, மானிடசாதியின் பேர் இட்டால்- இம்மையில் ஏதேனும் பெறலாமென்ற ஆசையால் கர்மத்திற்கு வசப்பட்ட மநுஷ்யஜாதியிற் பிறந்த ஒன்றன் பெயரை இட்டால், இம்மையில் ஏதாவது ஸித்தித்தாலும்,மறுமைக்கு இல்லை- மறுமைக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை, வானுடைமாதவா கோவிந்தா என்றழைத்தக்கால்- தன்னையடைந்தோரைக் கடத்தேற்றிக் காக்கின்ற ஸர்வேசுவரனுடைய திருநாமத்தை இட்டு பரமபதத்தையுடைய லக்ஷ்மிநாயகனே! இவ்வுலகை விரும்பி ரக்ஷிக்கின்ற கோவிந்தனே! என்று அழைத்தால், நானுடை நாரணன்-என்னுடைய நாராயணனது பேரைக்கொண்ட புதல்வனுடைய, எம்பெருமானிடத்தில் தமக்குள்ள அன்பின் மிகுதியால் 'நானுடை நாரணன்' என்று அருளிச் செய்தார். தம் அன்னை நரகம் புகாள்——.

மலமுடையூத்தையில்தோன்றிற்றோர்மலவூத்தையை
மலமுடையூத்தையின்பேரிட்டால்மறுமைக்கில்லை
குலமுடைக்கோவிந்தா!கோவிந்தா!என்றழைத்தக்கால்
நலமுடைநாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

மலம் உடை ஊத்தையில்- அசுத்தத்தையுடைய இழிந்ததான சரீரத்தினின்றும், தோன்றிற்று ஓர்- பிறந்ததாகிய ஒரு, மலம் ஊத்தையை- அசுத்தமும் இழிவுமுடைய தேஹத்தைக் கொண்டதற்கு, மலம் உடை ஊத்தையின் பேர் இட்டால்- அதைப்போல் மிகவும் இழிவான தேஹத்தைக்கொண்ட ஒன்றன் பேரையிட்டால்

இம்மையில் ஏதேனும் பிரயோஜனங் கிடைத்தாலும் மறுமைப் பயன் ஒன்றும் ஸித்திக்காது. குலம் உடை கோவிந்தா கோவிந்தா என்று அழைத்தக்கால்- கோபகுலத்திலே பிறந்து கோவிந்தா பிஷேகஞ் செய்து கொண்ட கோவிந்தா! கோவிந்தா! என்று எம்பெருமானுடைய பெயரையிட்டு அழைத்தால், கண்ணபிரான் ராஜகுலத்திலே அவதரித்தாலும் கோப குலத்தை இங்கு முக்கியமாகக் கொண்டு 'குலமுடைக் கோவிந்தா' என்று அருளிச்செய்தார். நலம் உடை நாரணன்- திரு[illegible]த்தைச் சொன்னவரைக் கடத்தேற்றுவிக்கும் நாராயணன், தம்மன்னை நரகம் புகாள்——.

நாடுநகருமறியநாட்டுமானிடப்பேரிட்டுக்
கூடியழுங்கிக்குழியில்வீழ்ந்துவழுக்காதே
சாடிறப்பாய்ந்ததலைவா!தாமோதரா!வென்று
நாடுமின்நாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

நாடும் நகரும் அறிய-நாட்டிலுள்ள அறிவிலியரும் நகரத்திலுள்ள அறிவுடையோரும் நன்ருய் அறியும்படி, நாட்டுமானிடப்பேர் இட்டு-அற்பக்குணமுடைய மனிதரின் பேரை இட்டு, கூடி அழுங்கி-அவர்களோடு கூடி அவர்கள்பக்கல் அன்புகொண்டு, குழியில் வீழ்ந்து வழுக்காது-அவர்கள் விழுந்த சம்சாரமாகிற படுகுழியில் விழுந்து தவறிப்போகாமல், சாடு இறப் பாய்ந்த தலைவா தாமோதரா என்று-ஸர்வேசுவரனுடைய திருநாமத்தை இட்டு சகடாசுரன் முறிய திருவடியால் உதைத்த தலைவனே! தாமோதரனே! என்று வாயாரவாழ்த்திக் கொண்டு, நாடுமின்-விரும்பி அழையுங்கள், நாரணன் தம் அன்னை நரகம்புகாள்——.

மண்ணிற்பிறந்துமண்ணாகுமானிடப்பேரிட்டங்கு
எண்ணமொன்றின்றியிருக்குமேழைமனிதர்காள்
கண்ணுக்கினியகருமுகில்வண்ணன்நாமமே
நண்ணுமின்நாரணன் தம்மன்னைநரகம்புகாள்.

மண்ணில் பிறந்து- பிருதிவி என்னும் பூதத்தை முதற்காரணமாகக் கொண்டு பிறந்து, "மண்ணுப் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாக்கை" என்றபடி சரீரம், பஞ்சபூதங்களாலாமதாயிருக்க இங்கு மண்ணாலாயது என்று சொல்லப்பட்டுளது. பிரு

திவியிற் கூறு ஒருபாதியும் மற்ற நான்கு பூதங்கள் சேர்ந்து பாதியுமாகிச் சரீரம் தோன்றுகின்ற முறையில் சரீரத்திற்குப் பிருதிவியின் கூறு மிகுதியாயிருப்பது பற்றி 'மண்ணிற் பிறந்து' என்றார். மண்ணாதல்-காரியத்திற்குக் காரணத்திலே லயமாதலால் மீளவும் மண்ணாவிடும், மானிடம் பேர் இட்டு-இவ்வாறு மண்ணினால் பிறந்து மண்ணிலே லயிக்கின்ற அற்பர்களான மனிதர்களின் பேரையிட்டு, அங்கு-அவ்விஷயத்தில், எண்ணம் ஒன்று இன்றி இருக்கும் ஏழை மனிசர்காள்-முன்பு ஆலோசனையில்லாமல் அவ்வாறு செய்தாலும் பின்பு 'நாம் என்னகார்யஞ் செய்தோம்' என்ற அநுதாபமாவது உங்கட்கு உண்டாகலாமே; அஃதொன்றுமில்லாமல் கவலையற்றிருக்கின்றீர்களே! இவ்வாறிருப்பது உங்களுடைய அறிவுகேடன்றோ! கண்ணுக்கு இனிய கருமுகில்வண்ணன் நாமமே நண்ணுமின்-வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கும்படி திருஷ்டிப்ரியமான காளமேகம்போன்ற வடிவையுடைய எம்பெருமானது திருநாமத்தை உங்கள் பிள்ளைகளுக்கு இட்டு அழைத்து அத்திருநாமத்தில் மனம் பொருந்தியிருப்பீர், அவ்வாறு செய்தால்; நாரணன் தம்மன்னை நரகம்புகாள்—.

நம்பிபிம்பியென்றுநாட்டுமானிடப்பேரிட்டால்
நம்பும்பிம்புமெல்லாம்நாலுநாளிலழுங்கிப்போம்
செம்பெருந்தாமரைக்கண்ணன்பேரிட்டழைத்தக்கால்
நம்பிகாள்!நாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

நம்பி பிம்பி என்று நாட்டு மானிடப் பேர் இட்டால்-லோகத்தில் "இன்னநம்பி", "இன்னநம்பி", என்று ஒரு கிராமத்திற்கும் ஜனபதத்திற்கும் ப்ரஸித்தராயிருக்கும் நாட்டிற் பிறந்துள்ள மனிதஜாதியரின் பெயரை இம்மைப் பயனை விரும்பி உங்கள் பிள்ளைகட்கு இட்டால், இங்கு நம்பியோடு ஒரு பிம்பியை அருளிச் செய்ததால் பிம்பி என்பதற்கு எப்படி பொருளில்லையோ அப்படியே நாட்டு மானிட நம்பிக்கும் ஒரு பொருளில்லை என்பதறியக்கிடக்கிறது. மேலும்நாட்டு மானிட நம்பியரின் பெயரிடலாகாதென்று விலக்கியதினால் திருக்குறுங்குடி நம்பி என்றும் திருக்கோஷ்டியூர்நம்பி என்றும் சொல்லப்படுகிற பகவத்பாகவதர்களின் பெயரிடலாமென்பது

பெறப்படும். நப்பும் பிப்பும் எல்லாம் நாலுநாளில் அழுங்கிப்போம். நம்பி பிம்பி என்றும் பேரிடுதற்குக்காரணமான அம்மனித ஜாதியின் முதன்மை யெல்லாம் சில நாளில் அழிந்து போய்விடும், "வாழ்ந்கார்கள் வாழ்ந்தே நிற்பதென்பதில்லை" என்பது மெய்யுரையன்றோ! செம்பெரும் தாமரைக்கண்ணன் பேர் இட்டு அழைத்தக்கால்- திருநாமத்தைச் சொன்னவர்களுக்கு ஸகல ஸம்பத்துக்களும் உண்டாகும்படி கடாக்ஷிக்கிற பெரிய செந்தாமரை போன்ற கண்களையுடைய எம்பெருமானுடைய பெயரை இட்டு அழைத்தால், நம்பிகாள்- அறிவினால் குறைவில்லாத பூர்ணர்களே! நாரணன் தம் அன்னை நரகம் புகாள்——.

> ஊத்தைக்குழியில்அமுதம்பாய்வதுபோலஉங்கள்
> மூத்திரப்பிள்ளையையென்முகில்வண்ணன்பேரிட்டு
> கோத்துக்குழைத்துக்குணலமாடித்திரிமினோ
> நாத்தகுநாரணன்தம்மன்னைநரகம்புகாள்.

ஊத்தைக்குழியில் அமுதம் பாய்வது போல - துர்க்கந்தமாய் அசுத்தமாய் தொடுக்கைக்கு யோக்கிய மற்றுச் சேறுயிருக்கிற அங்கணக்குழியில் நல்ல மணமுடையதாய் பரிசுத்தமாய் யோக்யருக்குப் போக்கியமுடையதாயிருக்கிற அமிர்தம் பாய்வதுபோல, உங்கள் மூத்திரப் பிள்ளையை - சுக்ல சோணிதபரிணாமமாகிய அசுத்தமான பிள்ளைக்கு, என் முகில்வண்ணன் பேரிட்டு - எனக்குச் சுலபனாய் நீலமேகம் போன்ற நிறத்தையுடைய நாராயணனது திருநாமத்தை இட்டு, இங்குத் திருநாமம் இடப்படும் பிள்ளையின் இழிவும் திருநாமத்தின் பெருமையும் தெளிவாகத் தோன்றும்படி 'ஊத்தைக்குழியில் அமுதம் பாய்வது போல்' என்ற திருஷ்டாந்த முகத்தால் கூறினார். ஊத்தைக்குழியில் அமிர்தம் பாய்ந்தால் தானும் அசுத்தமாய் உண்ணுகிறவர்கட்குப் போக்ய மற்றதாய்ப்போம். திருநாமமானது பரிசவேதி என்ற பச்சிலை தன்னைச் சார்ந்த இரும்பையும் பொன்னாக்குவது போல இருப்பதொன்றாகையால் இது, தனக்கோர் ஸ்பரிசதோஷமின்றியில் தான் புக்கவிடத்தையும் பரிசுத்தமாக்குவதாகும். இங்கு எடுத்துக்காட்டிய திருஷ்டாந்தமான அமிர்தத்தைக்காட்டிலும் தார்ஷ்டாந்திகமான திருநாமத்தின் வாசி அறியத்தக்கது. *கோத்து குழைத்து குணலம் ஆடி திரிமினோ-நீங்கள் எங்களபிமானத்தில் ஒதுங்காததினால் முன்பு "எங்கள் குழுவினில்

---

*'ஊரங்கண நீருரவு நீர் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்' என்பதுபோல் இங்குத் திருஷ்டாந்தமும் பொருந்தத்தக்கது.

புகுதலொட்டோம்" என்று அகற்றினோம். இப்பொழுது எங்களை அபிமானித்த எம்பெருமானுடைய திருநாமத்தை உங்களுடைய பிள்ளைகட்கு இட்டீர்களாதலால் நீங்கள் எங்களோடே பகவந்நாமத்தைச் சொல்லும்படி ஒருகோவையாகக்கூடிக்குலாவிக் குணலைக் கூத்தாடித் திரிவீர்களாக, நா தகும்—பிள்ளைக்குத் திருநாமத்தை இட்டு அதைப்பலகாலும் சொல்லுகையாகிற இது உங்கள் நாவுக்குச்சேரும், அன்றி 'நாத்தகும்' என்பதை நாராயணனுக்கு அடைமொழியாக்கி நாவினாற் சொல்லத்தகுந்தவனான நாராயணன் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். தம் அன்னை நரகம்புகாள்.—

சீரணிமால்திருநாமமேயிடத்தேற்றிய
வீரணிதொல்புகழ்விட்டுசித்தன்விரித்த
ஓரணியொண்டமிழ்ஒன்பதோடொன்றும்வல்லவர்
பேரணிவைகுந்தத்தென்றும்பேணியிருப்பரே.

இப்பாட்டால், இத்திருமொழியைப் பயின்றவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் எப்போதும் விரும்பியிருக்கப் பெறுவார்கள் என்று பலன் சொல்லப்படுகிறது.

சீர் அணிமால்-சிறந்தகுணங்களை ஆபரணமாகக் கொண்டுள்ள தன்னையடைந்தோரிடத்தில் அன்புடையவனாகிய ஸர்வேசுவரனது, அன்றி சீர் அணிமால் என்பதற்குக் குணங்களின் வரிசையையுடைய [அஃதாவது— எல்லாக் கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமான.] எம்பெருமானெனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். திருநாமமே இடத்தேற்றிய-இதர நாமங்களை மாற்றி நாராயணனுடைய நாமங்களே தத்தம் பெற்றபிள்ளைகட்கு இடும்படி பலகாரணங்காட்டித் தெளிவித்த, வீர்அணி தொல்புகழ் விட்டு சித்தன் விரித்த-புலன்களையடக்கவல்ல வீரப்பாட்டை ஆபரணமாகவும் பழமையான மங்களாசாஸநமாகிய புகழையுமுடையரான பெரியாழ்வார் விரித்துரைத்த, ஓர்அணி ஒள் தமிழ்-பயில்கின்றவர்கட்கு ஒப்பற்ற ஆபரணமாய் பொருள்விளக்கமாய் ஸர்வாதிகாரமான தமிழ்வடிவாயிருந்துள்ள, ஒன்பதோடு ஒன்றும் வல்லவர்-பத்துப்பாசுரங்களையும் உள்ளவாறறிய வல்லவர்கள், பேர் அணிவைகுந்தத்து-பெருமைபெற்ற அழகிய ஸ்ரீவைகுண்டத்தில், என்றும் பேணி இருப்பர்-எப்பொழுதும் ஸர்வேசுவரனை வாழ்த்திச் சுகமாக வாழப் பெறுவர்; எ—று.

———

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
சிங்கராசார்யர் ஸ்வாமி எழுதுவது]

(4வது தொகுதியின் 8வது பக்கத்தொடர்ச்சி)

ஆறாம்பத்தில், ஒன்பதாவது திருவாய்மொழியில், பத்தாம் பாட்டான ‘குறுகா நீளா’ என்பதன் வ்யாக்கியானமான ஆறாயிரப் படியில், “வைஷயிக ஸுகம் அல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டமாகையாலே, உமக்கபேக்ஷிதமன்றாகில் ப்ராசுர்ய ஸ்திரத்வாத்யநேககுணயுக்தமான கேவலாத்மாநுபவலக்ஷண ஸுகத்தை ப்ராப்யமாகக்கொள்ளலாகாதோ என்னில், கேவலாத்மாநுபவ ஸுகம் து:காஸம்பின்னமாய், நித்யஸித்தமாய் நிரவதிகமாவது; த்வத்கைங்கர்யஸுகம் க்ஷணிகமாய் அத்யல்பமாவது; ஆகிலும் அந்த ஆத்மாநுபவ ஸுகம் ஒரு தட்டும், இந்த கைங்கர்ய ஸுகம் ஒரு தட்டுமானால் இத்தைக்கைவிட்டு அத்தைப் பற்றுகை உறுமென்றிருப்பரோ அறிவுடையார்; இப்பொருள் உபபாதநீயமோ அந்த வைஷயிக சுகத்தினுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷகீர்த்தனம் பண்ணிற்று. அநபேக்ஷிதத்வ ஹேதுவாகவன்று; ஸ்வரூப நிரூபணம் பண்ணின வித்தனை. வைஷயிக ஸுகம் அநபேக்ஷிதமாகைக்கு (அடி) த்வத்கைங்கர்ய வ்யதிரிக்தமாகை. ஆதலால் அந்த வைஷயிக ஸுகத்தையும் கைவல்யஸுகத்தையுமொழிய த்வதநர்யார்ஹ சேஷத்வரூப ஸம்பந்தத்தை எனக்குத் தந்தருளவேணுமென்று எம்பெருமானைப் பிரார்த்தித்து முடிக்கிறார்” என்றருளிச்செய்திருக்கிறார், பாட்டில் குறுகாநீளா என்பதினால், ஸங்கோச விகாஸங்களில்லையென்றும், ‘இறுதிகூடா எனையூழி சிறுகாபெருகா’ என்பதனால் நித்தியமாகையாலே ஸர்வகாலத்திலும் க்ஷயவ்ருத்திகளுமில்லையென்றும், ‘அளவிலின்பம்’ என்கைபாலே ஸ்வபாவத: பரிச்சேதரஹிதமான ஆத்மானந்தமென்றும் சொல்லப்பட்டிருப்பதால் ஆத்மாநுபவரூபமான கைவல்யம் நித்யமென்றே ஏற்படுகிறது.

இப்படி இந்தப் பாசுர வ்யாக்யானமான ஆறாயிரப்படியில், 'கேவலாத்மாநுபவம் து:காஸம்பின்னமாய் நித்யஸித்தமாய் நிரவதிகமாவது' என்கிறதற்கு வஸ்துத: ஆத்மாநுபவ ஸுகம் அஸ்திரமாயிருந்தபோதிலும் அது ஸ்திரமாக ஏற்பட்டபோதிலும் அத்யல்பமான த்வத் கைங்கர்ய ஸுகத்திற்கு ஸதிருசமாகுமோ என்று சில ஆதுநிகர்கள் அர்த்தவர்ணணம் பண்ணினார்கள்.

கீழ் அவதாரிகையில் "ப்ராசுர்யஸ்திரத்வாத்யநேககுணயுக்தமான கேவலாத்மாநுபவ லக்ஷண சுகத்தை" என்றிருப்பதையும், திருவாய்மொழி வ்யாக்யானமான ஆறாயிரப்படியில் பூர்வாபரக்ருந்தங்களில் கைவல்யத்தினுடைய நித்யத்வத்தைப் பிரதிபாதிக்கிறதையும் நிரூபியாமல், கைவல்யத்தினுடைய அநித்யத்வ ஸ்தாபநத்தில் அபிநிவேசத்தாலே சொன்னார்களித்தனை. ஸர்வஜ்ஞான திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு பூர்வாபரக்ருந்தங்களுடைய விரோதத்தை அறியாமையை ஆரோபித்தார்கள்.

இது நிற்க; ஏழாம்பத்தின் ஐந்தாவது திருவாய்மொழியின் பத்தாம்பாட்டில், 'பெருந்துன்பம் வேரற நீக்கி' என்கிறவிடத்தில் ஆறாயிரப்படியில், "கைவல்ய ரூப மஹானர்த்தத்திலும் புகாமே" என்றருளிச்செய்திருக்கிறார். அதனால் கைவல்யத்தின் அவாந்தர பலம் ஆத்மாநுபவமென்றும், ஸாக்ஷாத்பலம்பகவதநுபவமென்றும் சொல்லுகிறவர்களுக்கு கைவல்யம் மஹா அநர்த்தமென்று அருளிச்செய்திருப்பது விருத்தமாகும்.

எட்டாம்பத்தில் எட்டாந்திருவாய்மொழியில் ஏழாம் பாட்டில், 'அதுவே வீடு வீடாமே' என்கிற வாக்கியத்துக்கு ஆறாயிரப்படியில், "இந்த ஆத்ம ஸ்வரூபாவிர்ப்பாவமே மோக்ஷமாகிறது; மோக்ஷம்பெற்றால் பெறும் ஸுகமாவது அதுவேஎன்று அத்யவசித்துக்கொண்டு வ்யதிரிக்த விஷயஸங்கத்தை யெல்லாம் விடில் ஆத்ம ஸ்வரூபாவிர்ப்பாவ லக்ஷணமாயிருந்த மோக்ஷம் கைவரும்" என்றருளிச் செய்திருக்கிறார்.

இத்தால் கைவல்யம் ஆத்மஸ்வரூபாவிர்ப்பாவ மோக்ஷமென்றேற்படுவதால் கைவல்யம் நித்யமென்றும் ஸ்வரூபாவிர்ப்பாவத்

துக்கு ஸ்தானமான நித்யவிபூதியே ஸ்தானமென்றும் ஏற்படுகிறது. ஒன்பதாவது பத்தில் முதல் திருவாய்மொழியின் ஒன்பதாம் பாட்டான 'ஆதுமில்லை மற்றவனில்' என்பதன் வ்யாக்யானமான ஆறாயிரப்படியில், "எல்லாவற்றிலும் மேற்பட்ட புருஷார்த்தமன்றோ ஸாம்ஸாரிகது:க நிவ்ருத்திரூப கைவல்யம்; அத்தைப் புருஷார்த்தமென்றுபற்றில் காது பெருக்கவென்று புக்கு பண்டுள்ளத்தையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே பண்டுள்ள ஸாம்ஸாரிக ஸுகத்தையும் இழக்குமித்தனை" என்றருளிச்செய்திருப்பதையுங்கண்டு கொள்க. இத்தால் காது பெருக்கப் புக்கு கூதையாக்கினால் ஆபரணத்தைப் பூணுகைக்கு முன்பிருந்த யோக்யதையும் போய் மேலும் அக் காது ஒன்றுக்கும் உபயோகமாகாதிருப்பதுபோலே பகவதநுபவமில்லாதிருக்கிற கைவல்யம் நித்யமாயிருப்பதால் ஸாம்ஸாரிக ஸுகாநுபவமுமில்லாமல் போய்விடுமாதலால் அத்தை விட்டு ஈசுவரனையே பற்றவேணுமென்று அர்த்தம் ஏற்படுகிறபடியால் கைவல்யத்துக்கு அவாந்தரபலம் ஆத்மாநுபவமும் ஸாக்ஷாத்பலம் பகவதநுபவமுமா மென்று சொல்லுகிறபக்ஷத்துக்கு விருத்தமாம்.

இப்படி கைவல்யத்தினுடைய நித்யத்வம் ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளில் ஸ்பஷ்டம். ஆசார்யர்களில் ஆளவந்தார் கீதார்த்த ஸங்கிரஹத்தில், "ஐஶ்வர்யாக்ஷர யாதாத்ம்ய பகவச்சரணார்த்திநாம்" "ஐசுவர்யாக்ஷர யாதாத்ம்ய பகவச்சரணார்த்திநாம்" என்றருளிச்செய்திருப்பதாலும், சது:ஶ்லோகியில், "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு" "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு" என்று அருளிச்செய்திருப்பதாலும் ஐசுவர்யத்துக்கு மேலும், பகவதநுபவத்துக்குக்கீழும் அக்ஷரசப்தத்தாலே கைவல்யத்தை நிர்த்தேசித்திருப்பதால், அந்த அக்ஷரசப்தம் நக்ஷரதீத்யக்ஷரம் என்கிறவ்யுத்பத்தியால் நித்யத்வத்தைச் சொல்லுகிறது.

பாஷ்யகாரரும் கெத்யத்ரயத்தில், "ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்" "ஸர்வகாமாந்:ச ஸாக்ஷராங்" என்று அக்ஷரசப்தத்தாலே கைவல்யத்தை நிர்த்தேசித்திருப்பதாலும், கீதாபாஷ்யத்தில், ஐசுவர்யார்த்திக்கு மேற்பட்ட அதிகாரியாயும், பகவச்சரணார்த்திகளுக்

குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளாயும் கேவலரைக் குறிப்பிட்டு, அவர்கள் கைவல்யத்துக்காக அநுஷ்டிக்கிற உபாஸந ப்ரகாரத்தையும் அந்திம தசையில் அந்திமஸ்ம்ருதியையும் ஸுஷும்நா நாடியால் நிஷ்க்ரமணத்தையும் அர்ச்சிராதிகதியையும், ப்ரக்ருதி வியுக்தாத்மஸ்வரூபமே ப்ராப்யமென்பதையும், புநராவ்ருத்தியில்லையென்பதையும், ஜ்ஞாநி நித்யயுக்தன் என்பதையும் அதாவது:— ஈசுவரனையே ப்ராபகமும், ப்ராப்யமுமாகவுடைய னென்பதையும், கைவல்யார்த்திக்கும் ஐசுவர்யார்த்திக்கும் தம்முடையமனோரத ஸித்திக்காக ப்ராபகமாகவே அத்யவஸித்திருக்கை யுக்தமென்பதையும் நிரூபித்திருப்பதாலும்,

பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில், 'ஐஶ்வர்யமக்ஷரகதிம்' 'ஐசுவர்யமக்ஷரகதிம்' என்று அக்ஷரசப்தத்தாலே கைவல்யத்தை வ்யவஹரித்திருப்பதாலும், பகவத்குணதர்ப்பணத்தில், "முக்தாநாம் பரமாகதி:" முக்தாநாம் பரமாகதி:" என்கிற நாமவ்யாக்கியாநவஸரத்தில் "முக்தாநாமேவ கேஷாஞ்சித் அர்வாசீ நாகதி: ஶ்ரூயதே" "முக்தாநாமேவ கேஷாஞ்சித் அர்வாசீ நாகதி: சுரூயதே" இத்யாதியாலே கைவல்யம் மோக்ஷமென்றும், அதற்கு ஸ்தானம் நித்யவிபூதியென்றும், சொல்லியிருப்பதாலும், ஆழ்வான் வரதராஜஸ்தவத்தில், "போகா இமே விதி ஶிவாதி பதஞ்சகிஞ்ச ஸ்வாத்மாநுபூதிரிதி யாகில முக்திருக்தா" "போகா இமேவிதி சிவாதி பதஞ்சகிஞ்ச ஸ்வாத்மாநுபூதிரிதி யாகிலமுக்திருக்தா" என்று கைவல்யத்தை முக்தியாக வ்யபதேசித்திருப்பதாலும்,

சுருதப்ரகாசிகையில், 'பாராஶர்யவசஸ்ஸுதாம்' "பாராசர்யவசஸ்ஸுதாம்" என்கிற சுலோகத்துள் 'வ்யபகதப்ராணாத்மஸஞ்ஜீவிநீம்' "வ்யபகதப்ராணாத்ம ஸஞ்ஜீவிநீம்" என்பதில் "ஜீவநம்-உஜ்ஜீவநம்; ஸம்ஸாரோந்மோசநம். ஸமிதி கைவல்யவ்யாவ்ருத்தி:" என்பதால் ஜீவநம் ஸம்ஸாரோந்மோசனரூபமென்று கைவல்யத்தைச் சொல்லி, அது ஸம் என்னும் உபஸர்க்கத்தால் விலக்கப்பட்டமையால் அதற்கு பகவதநுபவ வைசிஷ்ட்யமாகிற ஸம்யக்த்வம் இல்லையென்று காட்டியிருப்பதாலும்,

வேதார்த்த ஸங்கிரஹ தாத்பர்ய தீபிகையில் ''ஸோக்ஷ: ஸ ஸ்வராட்'' ''ஸோக்ஷ: பரமஸ்வராட்'' என்கிறவிடத்தில் அக்ஷரன் 'என்று முக்தனைச்சொல்லி, பரம: என்கிறவித்தால் கைவல்யரூப மோக்ஷவ்யாவ்ருத்தி:' என்றிருப்பதாலும் கைவல்யம் நித்யமென்னும் மோக்ஷமென்றும் ஸ்பஷ்டமாயறியத்தக்கது.

(தொடரும்.)

ஸ்ரீ:

மதுரை, ஸ்ரீசரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜஸபையின் 13, 14ம் வருஷோத்ஸவம்.

இந்தச் சபையின் 13, 14ம் வருஷோத்ஸவம் அக்ஷய௵ மாசி௴ 1, 2 (1927௵ பிப்ரவரி௴ 12, 13)உ களில் இவ்வூர் மதன கோபாலப் பெருமாள் கோவில் தாயார்ஸந்நிதி முன் மண்டபத்தில் (Ramnad District and Sessions judge) ஸ்ரீ. உ. வே. V. பாஷ்யமையங்கார் ஸ்வாமியின் அக்ராஸநாதிபத்யத்தில் இனிது நடைபெற்றது.

அக்காலத்தில் செந்தமிழ் உதவிப் பத்திராதிபர் ஸ்ரீமாந், திரு. கி. இராமாநுஜையங்கார்ஸ்வாமியால் இயற்றப்பெற்ற நல்வரவுப் பத்திரம், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் சடகோபஐயங்கார்ஸ்வாமியால் வாசிக்கலாயிற்று. அதன்பின் அக்ராஸநாதிபதியவர்கள் ஸபையை நோக்கி ''நான் திருமங்கலத்தில் முனிசீபாயிருந்தகாலத்தில் என் தமையனார் V. ஸ்ரீநிவாஸாசாரியர் இவ்வூர் முனிஸிபல் சேர்மனாக விருந்தார்; அவரும் இச்சபையின் வருஷோத்ஸவகாலங்களில் பன்முறை அக்ராஸநம் வஹித்துள்ளார்; யானும் அவருடன் பலகாலம் வந்து உபந்யாஸங்கள் செய்ததோடு பலபெரியோர்கள் செய்த உபந்யாஸங்களைக் கேட்டுளேன்; ஆதலால் எனக்கும் இச்சபைக்கும் பண்டேதொட்டு ஸம்பந்தமுண்டு; இதுநிற்க; இச்சபை மேன்மேலும் விர்த்தியடைதற்குரிய ஏற்பாடு செய்துவருவார் ஒருசில,

ராகக் காணப்பட்டாலும் அவர்கள் பெரிய கார்யங்களைச் செய்து முடிக்கிறார்கள்; அதுவும் அவர்களுடைய இடைவிடா முயற்சியின் ப்ரயோஜன மாகுமென்றே கருதுகிறேன்; இன்னும் பல ப்ரமுகர்கள் இச்சபை முன்னேற்ற மடைதற்குரிய ஏற்பாடுசெய்ய முற்படுவார்களாகில் இது மிகவும் பொலிவுற்றிருக்கும்;" என்பது முதலான பலஇன்னுரைகள் முன்னுரையாக உரைத்தார்கள்.

அதன்பின் ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ரக்ஷணஸபா வித்வானும் ந்யாய வேதாந்த வித்வானுமாகிய ஸ்ரீ. உ. வே. தேசிக வரதாசார்யஸ்வாமியால் 'ஸ்ரீ கீதார்தாத்பர்யம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. ஒரு நூலை அப்யஸிக்க முற்படுவான் அந்நூலை இயற்றியோன் பெருமையும், நூலின் சீர்மையும், நூலிற் சொல்லப்படும் பொருளின் மேன்மையும் முன்னர் அறிந்து கொள்ளவேண்டும். அம்முறைபற்றி ஆராயுமிடத்து உபநிஷத்தாகிய பசுவைக் கண்ணபிரானாகிய ஆயன் அர்ஜுனனாகிய கன்றைக்கொண்டு கறந்தான் என்று இதன் பெருமை அறியலாகும். ஆகலால் கீதை ஸர்வோபநிஷத்ஸாரமாயிருக்குமென்பது பெறப்பட்டது. மேலும் "கற்பார் ராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றும் "தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றும் சொல்லப்பட்ட பெருமையையுடையனாகிய ஸர்வேசுவரன் தசரதர்க்குத் திருக்குமாரனாக அவதரித்துத் தேவகார்யங்களைக் குறைவின்றி முடித்துப் பன்னீராயிரம் ஆண்டு ராஜ்யபரிபாலனஞ் செய்து எல்லாத் தர்மங்களையும் அநுஷ்டித்துக்காட்டி "நற்பாலயோத்தியில் வாழும் சராசரமுற்றவும் நற்பாலுக்குய்த்தனன்" என்றும், "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றிய" என்றும் சொல்லியபடி எல்லோரையும் நற்கெதியிற் செலுத்தினான். இங்ஙனம் ஸ்ரீராமபிரான் ஸர்வபரிபூரணனாய் விளங்காநிற்கவும், அவன், "உன்னடியார்க் கென்செய்வனென்றேயிருத்தி நீ" என்றபடி தன்னடியார்க்கு எல்லாஞ் செய்தவிடத்தும் 'என் செய்தோம்' என்றிருக்கும் இயல்பினனாகலால் குறைவுற்று அக்குறைகளை அகற்றிக் கொள்வதற்கே கிருஷ்ணனாய் அவதரித்து முன்பு திருவடியை (ஹநுமானை)த்தூதனுப்பிய குறை தீரப் பாண்டவர்கட்குத் தூது சென்று அரிய பெரிய கார்யங்களைச் செய்து பின் கீதாசார்யனாய் நின்று அர்ஜுனனை வியாஜமாகக் கொண்டு ஸ்ரீ கீதையை வெளியிட்டான். இக்கீதையின் பரமதாத்பர்யமாகக் கொள்ளத்தக்கது அதிலுள்ள

சரமசுலோகமர்கும். அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதிற் பொதிந்துள்ளது. என்பது முதலான பலவிஷயங்கள் அப்பொழுது அவரால் வெளியிடப்பட்டன.

அதன்பின் ஸேதுஸம்ஸ்தான மஹாவித்வான் ஸ்ரீ. உ. வே. ரா· இராகவையங்கார் ஸ்வாமி, 'இராமாவதாரம்' என்ற விஷயத்தைக் குறித்து உபந்யஸித்தார். அவதாரம் என்ற சொற்கு இறங்கிவருதல் என்பது பொருளாம். ஒப்புயர்வற்ற பரம்பொருள் தன்னிலையினின்று இறங்கி வருதலை அவதாரம் என்ற சொல் உணர்த்தும். ஜீவன் கர்மவசத்தாற் பிறக்கப் பிறக்க ஜ்ஞானவொளிமழுங்கி இழிவடைவான். ஸர்வேசுவரன் தன்னிச்சையால் அவதரிக்கின்றானாதலால் அவன் அவதரிக்க அவதரிக்க அவன் புகழ் சாணையிலிட்ட மாணிக்கம்போல் வளர்ந்தோங்குகிறது. இதைக் குறித்தே ஆழ்வாரும், "பிறப்பில் பல் பிறவிப்பெருமான்" என்று சுட்டி உணர்த்தினார். அவன் பிறந்த விடத்தும் பெருமானாகவே விளங்குகிறானென்று ஈண்டறியத் தக்கது. "𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌚𑌮𑍇𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍" "ஜந்மகர்மசமேதிவ்யம்" என்ற கீதாவாக்யத்தாலும் அறியலாம். கிருஷ்ணாவதாரம் முதலான அவதாரங்கள் வசுதேவர் தேவகி முதலானவர்கள் வேண்டிக்கொள்ள அதனாலும் தோன்றின என்று சொல்வதுண்டு. இராமாவதாரம் அங்ஙனம் தோன்றிற்றென்று சொல்லவியலாது. பிறப்பித்தோரையில்லாப் பரம்பொருளாகிய எம்பெருமான் தானே விரும்பித் தசரதற்குப் புதல்வனாக வந்து தோன்றினானென்றே சொல்லப்பட்டுளது. "பட்டர் ராமாவதாரத்திலே போர பக்ஷபாதித்திருப்பர்" என்று அவரருளிச்செய்வது கேட்கைக்காகச் சிறியாத்தான் ஒரு நாள் "பெருமாளுக்கு (ஸ்ரீராமபிரானுக்கு) எல்லா நன்மைகளுமுண்டாகிலும், கழுத்திலே ஓலைகட்டித் 'தூதுபோ' என்னப்போன கிருஷ்ணன் நீர்மை இல்லையே" என்ன "அதங்ஙனல்ல காண், கழுத்திலே ஓலைகட்டித் 'தூதுபோ' என்பாரில்லாமை தவிர்ந்தாரத்தனை காண்" என்று அருளிச்செய்தார். இன்னும் 'முழுவதும் வந்தான்' என்று பட்டர் அருளிச்செய்ததற்கு விஷயம் இராமாவதாரமாகும் என்பது முதலான பல அரியவிஷயங்கள் அப்பொழுது அவரால் வெளியிடப்பட்டன.

அதன்பின்னர் ஸ்ரீ. உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (B. A. B. L. ஹைக்கோர்ட்டு வக்கீல்) ஸபையின் சார்

பாக வந்தனோபசாரஞ் சொல்லத்தொடங்கித் தாமெடுத்துக்கொண்ட 'மதுரையும், ஸ்ரீ வைஷ்ணவமும்' என்ற விஷயத்தைச் 'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகுபற்றிப் பல ஹேதுக்கள் காட்டி நிரூபித்து வந்தனோபசாரமும் சொல்லி முடித்தார். அதன்மேல் அக்ராஸநர் முடிவுரைகூற அன்று ஸபை பூர்த்தியுற்றது.

13—2—27 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஸபை கூடியது. அப்பொழுது அக்ராஸநர் முன்னுரைகூற அதன்பின் ந்யாய சிரோமணியும், இராமேச்வரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத மஹா பாடசாலையின் உபாத்யாயருமாகிய ஸ்ரீ. உ. வே. S. ஸ்ரீநிவாஸ கோபாலாசார்ய ஸ்வாமி, 'பரதாழ்வான்' என்ற விஷயத்தைக் குறித்து உபந்யஸித்தார். ஸ்ரீ ராமாயண புருஷர் நால்வரினும் பரதாழ்வான் சிறந்தவனுப் விளங்கினன் என்பதற்குப் பல காரணங்கள் ஸ்ரீ ராமாயண முதலிய பல நூல்களிலிருந்து அப்பொழுது அவரால் வெளியிடப்பட்டன.

அதன்பின்பு திருச்சி ஸ்ரீ. உ. வே. **A. V.** கோபாலாசாரிய ஸ்வாமி (M. A. B. L. ஹைகோர்ட்டு வக்கீல்) 'ஸ்ரீ வைஷ்ணவம் ஸர்வஸம்ப்ரதிபந்நம்' என்ற விஷயத்தைக்குறித்து உபந்யஸித்தார். பலவகைச் சமயங்களுள்ளும் ஸ்ரீ வைஷ்ணவஸமயம் ஒன்றாக இருப்பினும் இதன் உண்மையை ஆராய்வோமாகில் இது ஓர் பொதுச் சமயமாகவே விளங்குகிறது. ஆகவே இதன் கோட்பாடெல்லாம் ஆஸ்திகராயுள்ளாரனைவரும் ஒப்புக்கொள்ளத்தகும் பெற்றியனவாய் விளங்கும் என்பதற்கு ப்ரஸ்தானத்ரயங்களில் (உபநிஷத், கீதை, ப்ரஹ்மஸூத்ரங்களில்) சங்கராசார்யர் முதலானவர்கள் விஷ்ணு பாரம்யமாகக்கூறிய சிலபாஷ்யவசனமேற்கோள்களும் அப்பொழுது அவரால் வெளியிடப்பட்டன.

அதன்பின் அக்ராஸநர் உபந்யாஸகருரைத்த விஷயங்களில் ஸாராம்ஸங்களை விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் நம் பூர்வாசார்யர்களில் ஒருவர்மற்றொருவரைநோக்கி வைஷ்ணவத்துவம் நமக்குண்டென்பதை எவ்வாறறிந்துகொள்வதென்று கேட்க அதற்கு அவர் ஒருவன் வருந்துவதைக்கண்டு ஐயோ! என்றிரங்குவானாகில் அவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு வருந்துவதைக்கண்டு இவனுக்கு இத்தனையும் வேண்டுமென்று அருளற்றவனாயிருப்பானாகில் அவனுக்கு வைஷ்ணவத்வம் இல்லையென்று அறிந்துகொள்ளவேண்

டுமென்று அருளினர். இதனுல் வைஷ்ணவராயுள்ளார் யாவராயி னும் அவர் அருளுடையவராய் எம்பெருமானிடத்தில் பக்தி பூண் டொழுகவேண்டும் என்ற பொருள்கொள்ளக் கிடைக்கிறது. எல் லோரும் அங்ஙனமே ஒழுகுவாராகவென்று மனக்களிப்புடன் முடி வுரை கூறி முடித்தார்.

பின்பு ஸ்ரீ. உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B. A. B. L. ஹைகோர்ட்டு வக்கீல்) ஸபையின் சார்பாக வந்த ளுபசாரம்கூற மதனகோபாலப்பெருமாள் ஸேவையும் கோஷ்டி விநியோகங்களும் விமரிசையாக வழங்கப்பெற்று ஸபை பூர்த்தி யுற்றது.

ஸ்ரீ:

இராமநாதபுரம் ஜில்லா நீதிபதி
ஸ்ரீ. உப. வே. V. பாஷ்யமையங்கார் ஸ்வாமி அக்ராசனராக
அக்ஷயவூ மாசிமீ 1, 2 தெய்திகளில் நடைபெற்ற,
மதுரை, ஸ்ரீசரண்யாபிமத விஷ்ணுசித்த
ராமாநுஜஸபையின்,
பதின்மூன்று, பதினான்காம் வருஷோத்ஸவக் கொண்டாட்டத்தில்
செந்தமிழ் உபபத்திராதிபர்
ஸ்ரீமாந், திரு. கி. இராமாநுஜையங்கார் பாடிய

மங்களவாழ்த்து.

தாழிசை.

திருவும் நிலமகளும் இடையர் குலமருவு
தெரிவை யொடுமெடிகள் வருடவே
அரவி னணையிலொரு பரவை மிசைதுயிலு
மனக னடியிணைகள் பரவுவாம்.

கலிவெண்பா.

தேனர் கமலத் திருமா மகள்கொழுநன்
தானே யவதரித்தும் சாத்திரமும்—ஆனை
நான்மறையும் மேனள் நவின்றுமுல குய்யர்த
பான்மையினைக் கண்டு பரிந்துருகி—மேன்மைமிகும்

ஆழ்வார் களையிக் கவதரிப்பித் திவ்வுலகோர்
தாழ்வகற்றி வாழ்வு தலைகட்டிப்—பாழ்நரகின்
மீண்டும் விழா தாரியரால் மெய்வெளி யிட்டருளி
யாண்டு மகிழ்ந்தனனவ் வாரியர்சொல்—நீண்டபுகழ்
மெய்ந்நெறியை யிந்த விரிதிரைநீர் ஞாலத்தோர்க்
கைய மறவிளக்க வாதரித்துப்—பொய்யாத
வையை நதிபாய் வளத்ததாய் மாண்புமிகு
செய்ய தமிழ்வளர்த்த தேசுடைத்தாய்—மெய்யிலகு
தண்டுளவத் தாரார் சரண்யன் றனித்தலைமை
பண்டு நிறுவு பழம்பதியாய்—ஒண்டமிழின்
சங்கந் தழைத்த தலமாய்த் தரணி புகழ்
மங்களமார் கூடல் வளநகரிற்—புங்கவர்கள்
கண்ட இராமா நுஜசபையிக் காசினியில்
எண்டிசையுங் கீர்த்தி யெழுந்தோங்கக்—கொண்ட
திவாகரத்தா னுள்ளத் திமிர மகற்றி
யவாவறுத்து ஞான மருளி—யுவாமதிபோல்
என்னாவளர்ந் திரேழாண் டெய்துதிரு நாள்சிறக்க
நண்ணு புலவர்சபா நாயகமாம்—அண்ணலுயர்
தென்கலையும் வேதச் செழுங்கலையும் மேல்புலத்தார்
நன்கலையுந் தேர்ந்துரைக்கும் நாவீறன்—இன்கவியால்
ஆழ்வார்கள் பாடு மடியிணையில் அன்புமிகும்
வாழ்வுபெறு பாஷ்யப்பேர் மாமறையோன்—எழ்புரவித்
தேரோ னொளிபரவு தேயமெலாங் காக்கின்ற
மாராசர் போற்று மதிப்புடையோன்—சீராம
நாதபுர நீதிமன் றுள் நாயகமா வீற்றிருந்து
நீதி முறைவழங்கு நேர்மையோன்—ஓதுமிந்த
நல்லோன் வரவிங்கு நல்வரவா மன்னுகமற்
றெல்லோர் வரவு மினிதாக—மல்லாண்ட
திண்டோள் மணிவண்ணன் சீர்வாழ்க வாழ்கவவன்
தண்டொடுவாள் சங்காழி சாரங்கம்
ஞாலமெலாங் கொண்டாட ராமா னுஜசபையும்
சாலவது வளர்க்குந் தக்கோரும்—சீலமிகும்

இச்சபையி னுபகனு மேய்ந்தபுல வோர்குழுவு
நிச்சலும் வாழி நிலத்து.

கலிவிருத்தம்.

வாழி கூட லழகன் மலரடி
வாழி பாஷ்ய நாம வரோதயன்
வாழி இச்சபை மன்னு திவாகரம்
வாழி யாரியர் வண்புக ழென்றுமே.

ஸ்ரீ:

‘அருள்கொண்டாடுமடியவர்’ வ்யாக்யானம்.

[ஸ்ரீ வானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானுயெழுந்தருளி யிருந்த வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(21-ம் பக்கத்தொடர்ச்சி)

நம்மாழ்வார் தாம் ததீய சேஷத்வத்தையே புருஷார்த்தகாஷ்டையாகப் பற்றினுரென்று மதுரகவிகளறிந்தார். அதை அடியொற்றியே இவரும் கவிபாடினுரென்னுமிடம் என்கொண்டறிந்து பிள்ளை வ்யாக்யான மிட்டருளினுர்? ‘‘𑌨𑌾𑌮𑍂𑌲𑌂 𑌲𑌿𑌖𑍍𑌯𑌤𑍇 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍’’ ‘‘நாமூலம் லிக்யதே கிஞ்சித்’’ என்றும் ‘‘𑌉𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌦𑍀𑌕𑌾𑌰𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌬𑍋𑌧𑌨𑌂, 𑌮𑌤𑌂 𑌵𑌿𑌵𑌰𑌣𑌂’’ ‘‘உக்தார்த்த விசதீகாரோ யுக்தார்த்தாந்தர போதநம், மதம் விவரணம்’’ என்றன்றோ விஹிதமாயிருக்கிறது. ‘‘𑌅𑌮𑍂𑌲𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑌨𑌾𑌦𑌰𑌣𑍀𑌯𑌂’’ ‘‘அமூலவ்யாநம் அநாதரணீயம்’’ அன்றோவெனில் ‘‘பயிலும் சுடரொளி நெடுமாற்கடிமை’’களில் ஆழ்வார் ததீய சேஷத்வத்தையே புருஷார்த்தமாகச் சொல்லியிருப்பதால் அதுவே அவர் ஸித்தாந்தமென்னுமிடம் ஸித்தம். ஆதலால் அமூலவிவரண மென்ற தோஷம்வராது

என்றுசொன்னல் "பொய்நின்ற ஞானம்" தொடங்கி 'அவர்வற்று' என்றதளவும் ஆழ்வாரருளிச்செய்த பாசுரம் 1296 ல் 1276 பாசுரம் பகவத் விஷயமாயும், மேலே சொல்லிய "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற் கடிமை" என்ற இருபது பாசுரம் மட்டும் ததீய விஷயமாயிருக்க "ஸஹஸ்ரநாமோநாம்ருஹொநாய:, ஸ்ரீயஸாம் ஸ்யாத்ஸ்ரீயஸம்" "பஹுநாமாநுக்ரேஹோங்யாய:, பூயஸாம்ஸ் யாத்பலீயஸ்த்வம்" என்கிற நியாயங்களுக்கு விருத்தமாய் பூயஸ்ஸை நிக்ருஷ்டமாகவும், அல்பீயஸ்ஸை உத்க்ருஷ்டமாகவும் சொல்லுகிறது மஹாமேரு மகார்ணவங்களை அல்ப பரிமாணங்களாக்கி ஸர்ஷபநிபானங்களைக் குருபரிமாணமாகச் சொல்லுமாப்போலே ப்ரத்யக்ஷ வ்ருத்தார்த்தமாகையாலே அவிசுவஸநியாயமாகும். அன்றியும் "திருவேங்கடத்தான் என்னை என்னப்பன் எம்பெருமானுளனாக, என்நாவின் கவியானொருவர்க்குங் கொடுக்கிலேன்" என்றும், "கட்டெழில் தென்குருகூர்ச் சடகோபன்சொல், கட்டெழிலாயிரம்" என்றும், "தெய்வநாயகன் நாரணன் திருவிக்கிரமனடியிணைமிசை செய்தவாயிரம்" என்றும், "முகில்வண்ணனடிமேல் சொன்ன சொன்மாலையாயிரம்" என்றும் தாம் கவிபாடியும் "செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட் செய்மின் திருமாலிருஞ்சோலை, வஞ்சக்கள்வன் மாமாயன்"என்று பிறர்க்கு உபதேசித்துமிருக்கிறபகவத்விஷயத்தை அமுக்யமாக்குவதும் அநுபபந்நமன்றோவென்னில்; அங்ஙனன்று. உள்ளபடி சப்தஸ்திதியையும், அர்த்தஸ்திதியையும் ஆராய்ந்தால் விருத்தார்த்தமாகமாட்டாது; ஸங்கதார்த்தமாகவே இருக்கும். எங்ஙனேயென்னில்; அர்த்தபலத்தாலேயிறே சப்தங்களுக்கு கௌரவம். கேவலம் சப்தபாஹுள்யத்தாலே சப்தங்களுக்கு கௌரவம் ஏற்படமாட்டாது. அப்படியாமாகில் மேகர்ஜிததுக்கும், சமுத்திரகோஷத்துக்குமே கௌரவம் சொல்லவேண்டும். இவ்வர்த்தம் "ப்ரணவொ ஹ்யவஸ்வாஸி" "ப்ரணவோ பகவத்வாசி" என்ற சுலோகத்தில் ஸுஸ்பஷ்டம்.

ஆகையால் பகவத்விஷயமான பாசுரங்கள் அதிகமாயிருந்தாலும் ததீயபரமான இரண்டு திருவாய்மொழியில் முந்துற 'பயிலுஞ்சுடரொளி' யில் "யவரேலுமவர் கண்டீர் எம்மையாளும் பரமர்" என்று

ஜாதி நிரூபணமன்றியில் ததீயரே எமக்கு ஸ்வாமி என்றும் "சண்டாள சண்டாளர்களாகிலும் மணிவண்ணர்க்காளென்றுள், கலந்தாரடியாரடியார்தம்மடியார் எம்மடிகளே" என்று சண்டாள அதமர்களாகிலும் ததீய ததீயரே எம் ஸ்வாமிகளென்றும், 'அடியாரடியா'ரென்று தொடங்கித் ததீயரில் எழுபர்வஞ்சொல்லி அவர்களுக்குத் தம்மை சரமப்ருத்பராகவும் இப்படி அந்வயமுகத்தாலே ததீய சேஷத்வநிஷ்டதையைச் சொல்லி, "நெடுமாற்கடிமை" யில் "அவனடியாரடியே கூடுமிதுவல்லால், விடுமாறென்பதென்னந்தோ வியன்மூவுலகு பெறினுமே" என்றும் "திருமாமணிசராயிங்கே யாண்டார் இங்கேதிரியவே" என்றும், "அன்றித் திருக்குறளன் மாயன் கோலமலரடிக் கீழ்ப்புகுதலுறுமோ" என்றும் "தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார், நனிமாக்கலவி யின்பமே நாளும் வாய்க்கும் நங்கட்கே" என்றும் இப்புடைகளிலே சேஷத்வமாகிற அமிர்தவெள்ளம் பெருகாநிற்க, பகவத் விஷயமாகிற வேப்பங்குடி நீரையும் பருகுவாருண்டோ என்று வ்யதிரேகமுகத்தாலே எடுத்துக்கழிக்கையாலும் ஆழ்வார் ததீய சேஷத்வத்தையே பரம புருஷார்த்தமாகப் பற்றினாரென்னத் தட்டில்லை. இந்த ரஹஸ்யமறிந்தே மதுரகவிகளும் "அருளினானவ்வருமறையின்பொருள்" என்று ப்ரபந்தீகரித்தருளினார். இதன்பொருள் பின்னாலே வ்யக்தம். இத்தை யுட்கொண்டே பிள்ளை வ்யாக்யானமிட்டருளினார். ஆகையாலே அமூல விவரமென்ற தோஷமும், அதிகப்ராசுர விஷயமான தோஷமும் வராது.

(தொடரும்)